Form-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
**CC No.332/ 2007**

-

Deposition of witness for: PW - 7

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : ஆறுமுகம் | Father/Husband Name | : | பிச்சன் |
| Calling | : | Date | : | 13.08.2025 |
| Age | : | | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 18th day of August 2025.

**(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது)**

**அரசுதரப்பில் முதல் விசாரணை**

நான் வேட்டையன்பட்டியில் குடியிருந்து வருகிறேன். விவசாய வேலை செய்து வருகிறேன். அசா1 ஆறுமுகத்தை தெரியும். ஆஜர் எதிரியை தெரியும், ஆஜர் எதிரி அசா1 ற்கு பணம் கொடுத்தபோது பார்த்திருக்கிறேன் அதனால் எனக்கு தெரியும். 2006 ம் வருடம் அசா1 ஆறுமுகம் பிளட் பட்டப்படிப்பு படித்திருந்தார். அசா1 ற்கு ஆஜர் எதிரி நீதிமன்றத்தில் கிளார்க் வேலை வாங்கி தருவதாக சொல்லி ரூ.37,000/- பணத்தை கொடுத்த விவரம் எனக்கு தெரியும். அச்சமயத்தில் ஆஜர் எதிரியும் நீதிமன்றத்தில் வேலை பார்த்துகொண்டிருந்த விவரமும் எனக்கு தெரியும். அசா1 பலமுறை இதுசம்மந்தமாக ஆஜர் எதிரியிடம் வேலை வாங்கி தருவதாக பல முறை கேட்டதற்கு அவர் பணமும் தரவில்லை, வேலை வாங்கியும் தரவில்லை. இதனால் அசா1 கொட்டாம்பட்டி காவல் நிலையத்தில் புகார் கொடுத்த விவரம் எனக்கு தெரியும். இதுசம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்

**ஆஜர் எதிரி**

**எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை**

பட்டியல் சாட்சி செல்லகண்னு, சொக்கலிங்கம் இருவரும் எனக்கு சொந்தம் என்றால் இல்லை, பழக்கம் அதனால் தெரியும். அசா1 வேலை வாங்கி தருவதாக எதிரிக்கு பணம் கொடுத்து ஏமாந்த விவரம் எத்தனை நாள் கழித்து தெரியும் என்றால் பணம் கொடுத்து 2, 3 நாட்கள் கழித்து எனக்கு தெரியும், எவ்வளவு பணம், யாரிடம் கொடுத்தார் என்று நேரடியாக எனக்கு தெரியாது என்றால் தெரியும், டீ கடையில் வைத்து பணம் கொடுத்தார், பணம் எவ்வளவு என்று எனக்கு தெரியாது. ஆறுமுகத்தின் உறவினர் முத்தையா பூசாரியை எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. இந்த வழக்கில் சாட்சியாக சேர்க்கப்பட்ட விவரம் போலீசார் சொல்லிதான் எனக்கு தெரியும் என்றால் கொட்டாம்பட்டி போலீசார் விசாரித்தபோது எனக்கு தெரியும்.

2) புகார் கொடுத்த பின்னர் என்னை போலீசார் விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். எந்த தேதியில் என்னை விசாரித்தார்கள் என்றால் தேதி ஞாபகம் இல்லை, எதிரியை கைது செய்த பின்னர் எதிரியை காவல் நிலையத்தில் வைத்து கொண்டு என்னை விசாரித்தார்கள். எனக்கு இந்த சம்பவம் பற்றி எதுவும் தெரியாது, அசா1 ஆறுமுகத்திற்கு உறவினர் முத்தையாபூசாரிதான் வேலை வாங்ககி தருவதாக பணத்தை பெற்றுக்கொண்டார், ஆறுமுகம் மூலமாக பணம் வாங்க முடியாது என்பதால் அரசு ஊழியரான எதிரி மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டு நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.